**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.351/2002**

Deposition of **<u> PW.4 </u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 22.04.2025 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. வெங்கடேசன் | Father's Name | : அருணாசலம் |
| Village | : பட்டுத்துறை | Taluk | : தலைவாசல் |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் | Age | : |

துவக்க நேரம்: 04.04 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

(சாட்சி வாதி தரப்பில் மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதியால் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு ஏற்கப்பட்டு இச்சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, வாதி தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

1) கடந்த 03.03.2023 நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். நான் முதன்முதலாக சாட்சியம் அளித்தபோது தாவா சொத்தை களப்பணி செய்துவிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் பின்னிட்டு வந்த அழைப்பாணையில், களப்பணி செய்து சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002, Dt.22.04.2025.

2) நான் தாவா சொத்தை எந்த தேதியில் களப்பணி செய்தேன் என்றால் கடந்த 24.11.2024 அன்று மாலை 4.00 மணியளவில் தாவா சொத்திற்கு சென்று களப்பணி செய்தேன். நான் களப்பணி செய்தபோது உடனிருந்தவர்கள் யார் யார் என்றால் திருமதி. சுதா, கிராம உதவியாளர், பட்டுத்துறை கிராமம், தலைவாசல் வட்டம் என்பவர் உடன் இருந்தார்.

3) எனக்கு அனுப்பட்ட 2-வது அழைப்பாணையில் ச.எண்.72/14, 72/15, 72/17 ஆகிய தாவா சொத்துக்களில் உள்ள மின் இணைப்பு, தாவா சொத்தின் பயிரின் வயது, தென்னை மற்றும் வாழை மரங்கள், ச.எண்.72/3-ல் வண்டிப்பாதை செல்கிறதா, அவ்வாறு வண்டிப்பாதையிருந்தால் பயன்பாட்டில் உள்ளதா, தாவா சொத்திற்கு எங்கிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யப்பட்டு வருகிறது என் றவிவரத்தையும், தாவா சொத்தின் இயற்கை அமைப்பையும் பார்வையிட்டு வந்து சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) ச.எண். 72/14, 72/15, 72/17 ஆகிய உட்பிரிவுகள் ரத்து செய்யப்பட்டு ச.எண். 72/3-ஆக மாற்றம் செய்யப்பட்டு கிராம கணக்கில் உள்ளது என்றால் சரிதான். இந்த ச.எண்.72/3 ஓடை என்ற வகைப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வகைப்பாட்டுடன் ச.எண்.72/3 முதல் 72/17 வரை உட்பிரிவு செய்யப்பட்டதாகவும் கிராம அ பதிவேட்டில் உள்ளது.

5) ச.எண். 72/14, 72/15, 72/17 ஆகிய உட்பிரிவுகள் நடைமுறையில் இல்லை என்று சொன்னால் சரிதான். முழுமையாக ரத்து செய்யப்படவில்லை, ஆன்லைன் வரைபடத்தில் இந்த உட்பிரிவுகள் உள்ளன. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட கோப்புகளை எடுத்து பார்த்தால் உண்மை நிலை தெரியவரும்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002, Dt.22.04.2025.

6) மேற்படி உட்பிரிவு கோப்பு கிராம நிர்வாக அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும் இல்லை என்றால் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கமாட்டோம். வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளதா, இல்லை என்றால் எனக்கு தெரியாது.

7) நான் களப்பணி செய்தபொழுது என்னென்ன இயற்கை அமைப்புகளை தாவா சொத்தில் பார்த்தேன் என்றால் மாட்டுச்சோளம், தீவனச்சோளம், ஓடை, கிணறு வேப்பமரம், மின் இணைப்பு, வடக்கு தெற்காக செல்லும் வண்டிப்பாதையுடன் சேர்ந்த இருபுற வாய்க்கால், தென்னை மரம் மற்றும் வாழை மரம் ஆகியவற்றைகள் உள்ளது.

8) தென்னை மரங்கள் சுமார் எத்தனை இருந்தன என்றால் சுமார் 20 மரங்கள் இருந்தன. தென்னை, வாழை மரங்கள் கிழமேலாக வரப்பில் இருந்தன என்றால் ஆமாம். தென்னை மரங்களுக்கும், வாழை மரங்களுக்கும் சுமார் எத்தனை வயது இருக்கும் என்றால் தென்னை மரங்கள் சுமார் 20 வயதிருக்கும், வாழை மரங்கள் சுமார் 8-9 மாதங்கள் வயதிருக்கும்.

9) தென்னை, வாழை மரங்களுக்கும், பயிர் வகைகளுக்கும், வடபுறத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றிலிருந்துதான் மரங்களுக்கும், பயிர்களுக்கும் நீர்பாசனம் செய்யப்படுகிறது என்றால் சரிதான். கிணற்றிற்கு அருகில் ஒரு ஆஸ்பட்டஸ் சீட் வேயப்பட்ட ஒரு கொட்டகை உள்ளது என்றால் சரிதான்.

10) நான் தாவா சொத்தை களப்பணி செய்தபொழுது இவ்வழக்கின் வாதி மணி என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். நான் மேலே குறிப்பிட்ட வண்டிப்பாதை தென்வடலாக செல்கிறது என்றாலும் இது தேவியாக்குறிச்சியிலிருந்து சிவசங்காராபுரம் கிராமம் வரை செல்கிறது என்றாலும் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002, Dt.22.04.2025.

11) நான் களப்பணி செய்தபொழுது தென்வடலாக செல்லும் வண்டிப்பாதையில் மேற்கில் கிழமேலாக வரப்பில் அமைந்துள்ள தென்னை மற்றும் வாழைமர வரப்பிற்கு பக்கத்தில் அதன் வழியாக ஏதேனும் வண்டிப்பாதை செல்கிறதா என்றால் நான் களப்பணி செய்தபொழுது இல்லை.

12) ச.எண்.72/14, 72/15, 72/17 ஆகியவை ச.எண்.72/3-லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ச.எண். 72/14 மற்றும் 72/15 ஆகிய உட்பிரிவுக்கு பிறகு தீர்வை ஏற்பட்ட தரிசாக இருந்ததது என்றால் சரிதான். ச.எண். 72/3-லிருந்து ச.எண்.72/14 மற்றும் 72/15 உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு ச.எண்.72/3- என்பது ஓடை / அரசு புறம்போக்கு என்பதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது என்றால் ஓடை என மட்டும் வகைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

13) ஓடை என்பது அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். ஓடை என்றாலே அரசுக்கு சொந்தமான இடம். இந்த ஓடை, அரசு புறம்போக்கு என்றாலும் தீர்வை ஏற்படாத தரிசு என்றால் சரிதான். ச.எண்.72/3- என்பது ஆட்சேபனைக்குட்பட்ட வகைப்பாடு என்றால் சரிதான்.ஆட்சேபனைக்குட்பட்ட ஓடை புறம்போக்கு என்பதால் ஓடை குறித்து மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டு நில நிர்வாக ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்து அதனடிப்படையில் நில நிர்வாக ஆணையர் இந்த ஓடையை தீர்வை ஏற்பட்ட தரிசாக மாற்றம் செய்து அறிக்கை சமர்ப்பிப்பதன் அடிப்படையில்தான் ஓடை தீர்வை ஏற்பட்ட தரிசாக மாவட்ட ஆட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான்.

14) மேற்படி மாவட்ட ஆட்சியர் உத்தரவிற்கு பின்னிட்டுதான் தீர்வை ஏற்பட்ட தரிசாக மாற்றம் செய்யப்பட்ட பிறகுதான் உட்பிரிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். மேற்படி நடைமுறையை பின்பற்றாமலும், மாவட்ட ஆட்சியர் மற்றும் நில நிர்வாக

ஆணையர் ஆகியோர்களின் உத்தரவு இல்லாமலும் ச.எண்.72/3-ல் நாங்கள் உட்பிரிவு செய்தது செல்லத்தக்கதல்ல என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ச.எண்.72/14, 72/15, 72/17 ஆகிய உட்பிரிவுகள் மாவட்ட ஆட்சியரால் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்ற காரணம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

15) மேற்படி ரத்து செய்யப்பட்ட கோப்புகள் கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. அந்த கோப்பை நாங்கள் பராமரிக்கமாட்டோம். மேற்படி உட்பிரிவுகள் ரத்து செய்யப்பட்ட விவரம் குறித்து அடங்கல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இந்த நடப்பு பசலிக்கான அடங்கல் பதிவேட்டில் அவ்வாறு இல்லை.

16) நான் பார்வையிட்ட இயற்கை அமைப்புகள் ச.எண்.72/14, 72/15 மற்றும் 72/17 ஆகிய சர்வே எண்களில் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.72/14 மற்றும் 72/15-ல் உள்ள பயிரை யார் பயிர் செய்தார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் மணி என்பவர்தான் பயிர் செய்வதாக தெரிந்துகொண்டேன்.

17) நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் பதிவேட்டில் (Ex.X4) மணி என்பவர் பயிர் செய்து வருவதாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். ச.எண்.72/3-ற்கான அடங்கல் பதிவேட்டில் 4 அனுபவத்தாரர்கள் அனுபவித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் STT-யில் 3-ம், 2C-பிரிவில் ஒரு நபரையும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 20 வருடங்களாக தென்னை மர பயிர் வைத்து வளர்த்து வரும் மணியின் பெயர் இந்த பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே பதிவேட்டில் பதிவுயிருந்த தகவலை நானும் பதிவு செய்தேன்.

18) ஒவ்வொரு ஆண்டும் கிராம நிர்வாக அலுவலராகிய நான் அனைத்து நிலங்களையும், களப்பணி செய்தும் STT மற்றும் 2C ஆகியவை குறிப்பிட்டு எழுதவேண்டுமென்றாலும் யார் யார் அனுபவித்தில் என்னென்ன பயிர் உள்ளதை என்பதை குறிப்பிட்டு எழுதபடவேண்டுமென்றாலும் சரிதான். ஆனால், புறம்போக்கு இடத்தில் உள்ள புதிய ஆக்கிரமிப்பாளர்களை மட்டும்தான் குறிப்பிடுவோம். புதிய ஆக்கிரமிப்பாளர்களின் பெயர்களை பதிவேற்றம் செய்யவில்லை. புறம்போக்கு நிலம் என்று குறிப்பிட்டுள்ளோம்.

19) ச.எண்.72/14 மற்றும் 72/15 ஆகிய உட்பிரிவுகள் தீர்வை ஏற்பட்ட தரிசாக இருந்தபொழுது வாதி மணியின் பெயரை நாங்கள் அடங்கல் கணக்கில் ஏற்றினோமா என்றால் இல்லை. ச.எண்.72/14 மற்றும் 72/15 ஆகிய உட்பிரிவில் உள்ள நிலங்கள் வாதியின் அனுபவித்தில் இருந்தபொழுதும், இந்த உட்பிரிவு உள்ள சொத்துக்கள் தீர்வை ஏற்பட்ட தரிசாக மாற்றம் செய்யப்பட்ட பிறகும் வாதி மணியின் பெயரை நாங்கள் வேண்டுமென்றே அடங்கல் கணக்கில் கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல.

20) ச.எண்.72/3-ஐ உட்பிரிவு செய்து பின்னிட்டு உட்பிரிவு அனைத்தும் ரத்து செய்யப்பட்டு மீண்டும் ச.எண்.72/3-ஆக தீர்வை ஏற்படாத புறம்போக்கு என்று மாற்றம் செய்த பின்னிட்டு STT மற்றும் 2C-யின் கீழ் வாதி மணியின் பெயரை நாங்கள் வேண்டுமென்றே தவிர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல.

21) ச.எண்.72/17 என்ற உட்பிரிவை பூமியில் இல்லாத ஒரு பாதையாக நாங்கள் தவறுதலாக உட்பிரிவு செய்யப்பட்டதால்தான் மேற்படி உட்பிரிவு பின்னிட்டு ரத்து செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ச.எண்.72/3 ச.எண். 72/4-லிருந்து ச.எண்.72/17 வரை உட்பிரிவு செய்யப்பட்டு அடமானம்

வழங்கப்பட்டுள்ளது என்றால் கிராம கணக்கில் உள்ள பதிவேடுகளை பரிசீலித்தால் அதன் உண்மைநிலை தெரியவரும். மேற்படி உட்பிரிவுக்கு பின்னிட்டு சட்ட முரணாக அடமானம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சட்ட முரணாக அடமானம் வழங்கப்பட்டதால்தான் உட்பிரிவு ரத்து செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

22) உட்பிரிவு செய்யப்பட்ட காலகட்டத்தில் நானும் பணியாற்றயதால் மேற்படி சட்ட முரணான அடமானத்திற்கு நானும் பொறுப்பாவேன் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் நான் அந்த கிராமத்தில் பணியில் இல்லை.

23) ச.எண்.72/17- உட்பிரிவு என்பது ரத்து செய்யப்பட்டு தற்பொழுது புழக்கத்தில் இல்லை என்றால் தற்பொழுது 72/3 மட்டுமே உள்ளது. ச.எண்.72/17-ஆனது நடைமுறையில் உள்ளதா என்றால் இல்லை. 2A என்பது அரசு சொந்தமான புறம்போக்கு நிலத்தை தான் அனுபவத்தில் வைத்திருக்கும் தனிநபருக்கு வழங்கப்படும் அனுபவத்திற்கான தண்டத்தீர்வை ரசீது என்றால் சரிதான்.

24) என்னிடம் காட்டப்படும் தண்டத்தீர்வை 17-ரசீதுகள் (Ex.A4) எங்களது அலுவலகத்தால் ஒரு ஆறுமுகம், பெரியசாமி, எல்லம்மாள், முத்துசெட்டி ஆகியோர் பெயர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் வழங்கப்பட்டிருக்கலாம். மேற்படி 17-தண்டத்தீர்வை ரசீதுகளிலும் பட்டுத்துறை கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் கையெழுத்திட்டு வழங்கிருக்கலாம்.

25) ச.எண்.72/3-ல் உள்ள சொத்தை வாதியும், அவரது மூதாதையர்களும் முன் அனுபவதாரர்களும் மேற்படி சொத்திற்க தண்டத்தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதற்காக வழங்கப்பட்ட தண்டத்தீர்வை ரசீதுகள்தான் மேற்கண்ட 17 ரசீதுகளும்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002, Dt.22.04.2025.

26) ச.எண். 72/3-ல் உள்ள ஆக்கிரமிப்புகை அகற்ற கோரி, நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 6, 7-ன் கீழ் ஏதேனும் வாதிக்கு அறிவிப்பு அனுப்பபட்டதா என்றால் நான் பணிபுரிந்தபொழுது அவ்வாறு எதுவும் அனுப்பப்படவில்லை. ச.எண்.72/3 இதற்கான உட்பிரிவுகள் ச.எண்.72/3-க்கு முன்பு ஆகிய காலகட்டங்களில் வாதிக்கு எதிராக இதுவரை ஆக்கிரமிப்பு தொடர்பாக எவ்வித வெளியேற்ற நடவடிக்கைக்கு அறிவிப்பு அனுப்பபடவில்லை என்றாலும் வாதி யாது ஒரு இடையூறுயில்லாமல் தொடர்ந்து அனுபவித்து வருகிறார் என்றால் நோட்டீஸ் எதுவும் நான் பணியாற்றிய காலத்தில் அனுப்பபடவில்லை. ஆனால் வாதி மற்றும் மற்ற நபர்களும், விவசாயிகளும், பட்டா நிலத்தோடு சேர்ந்துள்ள புறம்போக்கு நிலத்தையும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

27) ச.எண்.72 புலவரைப்படத்தில், ச.எண்.72/3 உட்பிரிவு செய்வதற்கு முன்பாக அதாவது ச.எண். 72/17 உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு தடம் இருந்ததாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புலவரைபடம் ச.எண்.72/3 உட்பிரிவு செய்வதற்கு முன்பு தயார் செய்யப்பட்ட புலவரைபடம் என்றால் சரிதான். இந்த புலவரைபட நகல் சா.த.சா.ஆ.**X6** ஆகும்.

28) இந்த புலவரைபடத்தில் தென்வடலாக செல்லும் தேவியாக்குறிச்சி-சிவசங்காராபுரம் செல்லும் சாலையை தவிர்த்து வேறு எந்த சாலையும் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிகளுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கை வாதிக்கு சாதகமாக தீர்மானிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002, Dt.22.04.2025.

**<u>D1,D3</u>** <u>மற்றும்</u> **<u>D9</u>** <u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> **:**

1) என்னிடம் காட்டப்படும் தண்டத்தீர்வை ரசீதுகள் (Ex.A4) எந்த சர்வே எண், எந்த புறம்போக்கு நிலத்தின் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு பதிவேட்டுகளை பார்த்தால்தான் சொல்ல முடியும். ஒரு கிராமத்தில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்கள் பல்வேறு இடங்களில் இருக்கும் என்றாலும் இந்த தண்டத்தீர்வை ரசீதுகள் இந்த வழக்கு தொடர்புடைய சர்வே எண்ணுக்கு குறிப்பாக சொல்ல முடியாது என்றால் தொடர்புடைய பசலி ஆண்டுகளின் பதிவேடுகளை பார்த்தால்தான் சொல்ல முடியும்.

2) இந்த வழக்கு 2002-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த 2002-ம் ஆண்டு தாவா சொத்தை யார் யார் அனுபவித்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாவா சொத்திலுள்ள தென்னை மரங்கள் சுமார் 20 வயதுடைய மரங்கள் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும் இந்த வழக்கு தாக்கல் செய்து சுமார் 23 ஆண்டுகள் உள்ள நிலையிலும் இந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் மேற்படி தென்னை மரங்கள் நடப்பட்டுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

3) ச.எண்.72/17 என்பது ஏற்கனவே வண்டிப்பாதை என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஓடை என்றும் அடைப்புக்குள் வண்டிப்பாதை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. வருவாய்த்துறை ஆவணங்களில் மணி என்பவர் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பணியாற்றிய காலத்தில் மணி பெயர் இல்லை. நான் தாவா சொத்தை களப்பணி செய்தபொழுது இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்துவிட்டு தாவா சொத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பார்வையிட மட்டுமே எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. தரப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு

இல்லை. வாதி மணி தாவா சொத்திலும், கிணற்றிலும் அனுபவத்திலியிருப்பதாக சொல்வது தவறு என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம்: 05.51 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.351/2002, Dt.22.04.2025.